9899

# திருக்கோணமலைத் திருவுருவங்கள்

15251



(1954)

# திருக்கோணமலைத்

# திருவுருவங்கள்

குல. சபாநாதன்

1954

உ

திருச்சிற்றம்பலம்

# முகவுரை

திருக்கோணமலை வெண்கலத் திருவுருவங்கள் (Trincomalie Bronzes) என்னும் பொருள் பற்றி டக்டர் டபிள்யு. பாலேந்திரா அவர்கள் ரேயல் ஆசியச் சங்கத்தில் ஆங்கில மொழியில் ஒரு கட்டுரை வாசித்தார். இது இப்பொழுது நூலாக வெளிவந்துள்ளது. கோணேசர் ஆலயத்தின் பூர்வீக வரலாற்றையும், திருக்கோணமலையில் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களின் சிறப்பையும் பற்றி டக்டர் அவர்கள் சிறந்த முடிபுகளைக் கூறியுள்ளார்கள். இந்நூலையும் யான் சேகரித்த குறிப்புகளையும் ஆதாரமாகக்கொண்டே இச்சிறு நூல் தமிழில் அமைக்கப்படலாயிற்று. டக்டர். டபிள்யு. பாலேந்திரா அவர்களே இதனை வெளியிடுதற்குரிய செலவைத் தந்துதவினார்கள். இதற்காக அவர்கட்கு எனது நன்றி உரியதாக. இந்நூலைச் சைவ உலகம் ஏற்று ஆதரிக்குமென நம்புகிறேன்.

இங்ஙனம்

குல. சபாநாதன்

வெள்ளவத்தை,

கொழும்பு.

1954-ஆம் ஆண்டு மாசி 20 உ

மகாசிவராத்திரி தினம்.

# திருக்கோணமலைத் திருவுருவங்கள்

## தோற்றுவாய்

இலங்கையின் சிறந்த அரணாக விளங்குவது திருக்கோணமலை. இலங்கையைப் பிடிக்கும் நோக்கமாக வந்த போர்த்துக்கீசர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதன் முதற் கால் வைத்த இடமும் திருக்கோணமலையேதான். கடந்த மகா யுத்தத்திலும் திருக்கோணமலை, கடற்படை காவல் புரிந்த பேர் பெற்ற துறைமுகமாக விளங்கி வந்தமை உலகம் அறிந்த விஷயம். இலங்கையிலே தமிழர்கள் முதல் முதலாகக் குடியேறிய பிரதேசம் திருக்கோணமலைப் பகுதியாக விருத்தல் கூடுமெனச் சரித்திராசிரியர் ஒருவர் கருதுகின்ருர். கிழக்கு மாகாணத்திலுள்ள இடப்பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக இருத்தலும் இக்கொள்கையினை வலியுறுத்தும்.

இங்ஙனம் தமிழர் நாகரிகம் பரவியிருந்த பிரதேசத்தில் அதன் நடுநாயகமாக ஒரு சைவ நகரம் (கோயில்) இருந்திருத்தல் இயல்புதான். புராதனப் பெருமை வாய்ந்த இப்புனித ஸ்தலத்தின் வரலாறு முழுவதும் கிடைக்கப் பெருமை தமிழர் தம் தவக் குறையென்றே சொல்லலாம். இதன் பண்டை வரலாறு காலத்திரையினுல் மூடப்பட்டுக் கிடக்கின்றது. தக்ஷிண கைலாய புராணம், திரிகோணசல புராணம், கோணேசர் கல்வெட்டு, திருக்கோணசல வைபவம் முதலிய நூல்களிற் சிற்சில சம்பவங்கள் மட்டுமே ஆங்காங்கு மிளிர்கின்றன.

## பெயர்க் காரணம்:

திருக்கோணமலையென்னும் பெயர் மும்மலைகள் சூழ முக்கோண வடிவினதாயிருந்ததால் ஏற்பட்ட பெயர் என்பர் ஒரு சாரார். கோணேசுவரர் எழுந்தருளப்பெற்ற மலையாதலின், இத்தலம் திருக்கோணேஸ்வரம், திருக்கோணமலை, திருக்கோணமாமலை, திருக்கோணசலம்

எனப் பலபட வழங்கப்படலாயிற்று என்பர் பிரிதொருசா ரார்.சம்பந்த சுவாமிகளும் 'கோணமாமலை' என்றே பாடி யருளியுள்ளார். அருணகிரிநாதர் இத்தலத்தைத் திருக் கொணமலையென அமைத்தே பாடியுள்ளார். இதன் பூர்வீக நாமம் திருக்கோகர்ணமாயிருத்தல் கூடுமென ஒரு நவீன ஆராய்ச்சி அண்மையிற் கிளம்பியது. ஆனல் இது தக்க சான்றுகளுடன் நிருபிக்கப்படவில்லை.

சரித்திரச் சுருக்கம்:

இராவணன் இத்தலத்தில் வழிபட்டான் எனப் புராணங்கள் கூறுகின்றன. சோழ நாட்டரசனுகிய வர ராம தேவன் திருக்கோணமலைச் சிகரத்திற் கோணேச ருக்குக் கோயில் எடுத்தான் எனவும், இவனுடைய மகன் குளக்கோட்டன், இத்திருப்பணியை நிறைவேற்றி இலங்கை இராச குமாரியாகிய ஆடக சவுந்தரியை மண முடித்து வாழ்ந்து, ஈற்றிற் சோதியிற் கலந்தான் என வும் தக்ஷிணகைலாச புராணம் கூறுகின்றது. கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் இக்கோவிற் பூசை ஒழுங்காக நடைபெறுவதற்கு வேண்டிய பூசகர்களை அமர்த்திக் கோயிலையும் திருத்தியமைத்தான் எனக் கோணேசர் கல்வெட்டு கூறுகின்றது. ஏழாம் நூற் ருண்டில் வாழ்ந்தவராகப் கருதப்படும் சம்பந்த சுவாமி கள் காலத்தில் இவ்வாலயம் சிறந்த நிலைமையில் இருந் தமையால்''கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரே'' எனப் பாடியுள்ளார். பதின் மூன்றும் நூற்றுண்டின் நடுப்பகுதியில் இருந்தவனுகிய புவனேக வீரபாண்டியன் கோணமலையில் தன் இருகய லெழுதி கோயிலுக்குரிய நிலங்களை இறையிலி நிலமாக் கினன் என்ற வரலாறு குடுமியாமலைச் சாசனத்திற் கூறப்பட்டுள்ளது. பதினைந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த வராகக் கருதப்படும் அருணகிரி நாதரும் கோணேசருக் குத் திருப்புகழ்ப் பாமாலை சூட்டியுள்ளார். யாழ்ப்பா ணத்திலிருந்து அரசு புரிந்த ஆரியச் சக்கரவர்த்திக ளும் இக்கோவிலை ஆதரிந்து வந்தனர்.

கி. பி. 1627 வரை இலங்கையிற் போர்த்துக்கீசத் தேசாதிபதியாகவிருந்த ''கொன்ஸ்தாந்தினு தெசா'' என்பவனே இக்கோவிலை இடித்து அதன் கற்களைக் கொண்டு கோட்டையைக் கட்டினுன். கோயிலின் சரித் திரம் அமைந்த சாசனங்கள் பலவற்றை அழித்தவனும் இவனே. இவ்வரலாற்றினை லிஸ்பனிலுள்ள நூல் நிலை

யத்திலிருந்து பிரதி செய்து விரிவாக எழுதியிருக்கிறுர் லெவ்ரினன்ற் கேணல் ஜீ. பி. தொமஸ் அவர்கள் ''திருக்கோணமலைச் சரித்திரம்'' என்ற நூலில். இக் கோயில் அழிக்கப்பட்ட சம்பவம் எற்கெனவே ஒரு வெண் பாவிற் கூறப்பட்டிருந்ததை முதலியார் செ. இராசநா யகம் அவர்கள் தாம் எழுதிய ''புராதன யாழ்ப்பாணம்'' எனும் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். போர்த்து கீசர் இக்கோயிலையிடிப்பதற்கு முன்னர் ஆயிரக்கால் மண்டபமும் அழகிய வீதியும் அமையப்பெற்ற படம் ஒன்றை வரைந்து எடுத்துச் சென்றனர். இது கோணே சுவரர் திருவருட் செயலன்றே குறிப்பிடவேண்டும்.

பறங்கிக்காரர் திருக்கோணுசலத்திற்கு வந்து குளக்கோட்டு மகாராசனுற் கட்டப்பட்ட கோயிலையும் ஆயி ரக்கால் மண்டபம் முதலியனவைகளையும் இடித்து பாவ நாச குளத்தையும் மூடியதுடன், கோயில் முதலியவற் றிலிருந்த கருங்கற்களை எடுத்துத் தற்காலமிருக்கும் கோட்டையைக் கட்டிமுடித்து திருக்கோணுசல நகரையும் அரண் செய்தார்கள். அக்காலத்தில் திருக்கோணுசலத் துக்குப் போய் பூசை செய்யப்படாதென்று நிட்டூரமான கட்டளை செய்தார்கள். தற்காலமிருக்கும் கோட்டைவாயிற் கதவு நிலையில் வைக்கப்பட்டிருக்கும் கல்லில் ''முன்னே குளக்கோடன் மூட்டுந் திருப்பணியைப் பின்னே பறங்கி பிரிக்கவே'' எனத் தொடங்கும் பாட்டு வெட்டப்பட்டிருக் கின்றது. மற்ற இரண்டு வரிகளும் அதிகம் விளக்கமில் லாமல் அழிந்திருக்கின்றன.

கோயில் இடிக்கப்பட்டதும் அங்கிருந்த விக்கிரகங் களைப் பூசகர்கள் எடுத்துச் சென்று ஒளித்து வைத்தனர். பின்னர்ச் சிலவற்றைத் தம்பலகாமத்தில் வைத்து வழி பட்டு வந்தனர். கோவில் இடிக்கப் பெற்ற போதிலும் சைவ நன்மக்கள் திருக்கோணமலைக் கோட்டைக்குள் கோயில் இருந்ததாகக் கருதப்பட்ட இடத்திற்குப் பூசை செய்து வரும் வழக்கத்தைக் கைவிடவில்லை. அநேக இடையூறுகள் நேர்ந்தும் இவ்வழிபாடு தொடர்ந்து நடை பெற்று வந்தது.

பழைய இடத்தில் மீண்டும் ஒரு ஆலயம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் சைவ மக்களிடையே அடிக்கடி எழுந்தது. இதனுற் பல முயற்சிகள் தோன்றி மறைந்தன. 1939-ஆம் ஆண்டில் டக்டர் டபிள்யூ. பாலேந்திரா அவர்கள் இக்கோயிலை மீண்டும் கட்டவேண்டும் என்ற ஆசையுடன் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதித் தலைவராகிய லோங்கேஸ்ற் மூலம் கட்டடப் படம் ஒன்று தயாரித்து ஆவன செய்து வந்தார். ஆனுல் அம்முயற்சியும் நிறைவேறவில்லை.

## திருக்கோணமலை வெண்கலத் திருவுருவங்கள்

1950-ஆம் ஆண்டு ஆடி மாதம் 3-ஆம் திகதி நீலத்திரைக் கடலோரத்திலேயுள்ள சுவாமி மலையில், ஒளிப்பு மறைப்பின்றித் தன் கரங்களை நீட்டி வரவேற்பது போல இளவள ஞாயிறு பிரகாசிக்கும் வேளையில் காலை 10 மணியளவில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. திருக்கோணமலை உதவி ஏசண்டரின் காரியாலயக் கருமாதிகாரி, திருக்கோணமலைத் தேர்தற்பகுதியின் பாராளுமன்ற அங்கத்தவர், நகர சங்கத் தலைவர், உபதலைவர், பொது வேலைப் பகுதி டிஸ்திறிக் இஞ்சினியர், ஓவசியர்மார், பாடசாலை ஆசிரியர்கள், கோயிற் பூசகர்கள் முதலியோர் சமுகமளித்தனர்.

1624-ஆம் ஆண்டு இந்து புது வருடப் பிறப்புத் தினத்தன்று போர்த்துக்கீசத் தளபதி கொன்ஸ்தாந்தினு தெசா என்பவனுல் தரைமட்டமாக்கப்பட்ட கோணேசர் கோயிலை மீண்டும் கட்டியெழுப்புதலைப் பற்றி ஆலோசிப்பதற்காகவே இத்தொண்டர் குழாம் கூடியது. கோயிலைக் கட்டி நிறைவேற்றிய பின்னர், அதன்கண் எத்தகைய திருவுருவத்தைப் பிரதிட்டை செய்வது என்ற கேள்வி அப்போது எழுந்தது. இக்கேள்விக்கு உடனடியாக விடையிறுப்பது சாத்தியமன்ருதலின் அதனை நன்காலோசித்துத் தீர்மானிக்குமாறு ஒரு கருமச்சபை நியமிக்கப்பட்டது. கோணேசர் ஆலயத்தை மீட்டும் கட்டுதல் பற்றியும் காசியிலிருந்து சிவலிங்கத் திருவுருவம் ஒன்றை வரவழைத்தல் பற்றியும் ஆலோசிக்க இந்தக் கருமச் சபையின் அங்கத்தவர்கள் 1950-ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6-ஆம் திகதி மீண்டும் கூடுவதாகத் தீர்மானித்தனர். இதற்கிடையில் பட்டின சங்கத்தினுல் வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர் சிலர் வடகடற்கரைத் தெருவீதியிலுள்ள சிறு குடிசைகளில் வசிப்பவர்களின் உப

10090

யோகத்திற்காக ஒரு கிணறு வெட்டிக் கொண்டிருந்தனர். இத்தொழிலாளர்களுள் ஒருவர் 1950-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ஆம் திகதி நிலத்திலிருந்து மூன்று அடி ஆழத்தில் வெட்டிய பொழுது, அவர் தமது மண்வெட்டி ஏதோ ஒரு கடினமான பொருள் மீது பட்டதை உணர்ந்தார். உடனே, சகல தொழிலாளரும் ஒருங்கு சேர்ந்து கிண்டினர். என்ன அதிசயம்! மூன்று அழகிய திருவுருவங்கள் வெளிக்கிளம்பின. சிவன் (சோமாஸ்கந்த மூர்த்தம்), சோமாஸ்கந்த மூர்த்தத்தின் ஓர் அங்கமான பார்வதி, சந்திரசேகரர் ஆகிய இம்மூன்று திருவுருவங்களும் பட்டின சங்கத் தலைவர் வசம் ஒப்படைக்கப்பட்டன. அவர் இவ்விஷயத்தைத் தொல்பொருட் பகுதி அதிபருக்கு அறிவித்தார். மேற் கூறிய மூன்று திருவுருவங்கள் வெளிக்கிளம்புவதற்கு முன்னரே வேறு இரு வெண்கலத் திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. ஆனால் இவை பட்டின சங்கத் தலைவர் வசமாவது தொல் பொருட் பகுதித் தலைவர் வசமாவது ஒப்படைக்கப்படவில்லை. இவை எங்கு இருக்கின்றன என்பதையறிந்து கொள்ளப் பிரயத்தனம் செய்யப்பட்டது. இதன் பயனாக வெண்கலத்தாற் செய்யப்பட்ட கணேசர் விக்கிரகம், பார்வதி விக்கிரகம், திரிசூலம், அன்னப்பறவை என்பவை ஏற்கெனவே கண்டெடுக்கப்பட்டமை தெரிய வந்தது. இந்த வெண்கலப் பொருட்களும் வட கடற்கரைத் தெருவீதியிலுள்ள ஒரு தென்னை மரத்து அடி வேரினுள் மறைந்து கிடந்து கண்டெடுக்கப்பட்டன. இவையும் கடைசியாகத் திருக்கோணேஸ்வரத் திருப்பணிச் சபைத் தலைவர் வசம் ஒப்படைக்கப்பட்டன. இந்த ஏழு பொருட்களும் எங்கே செய்யப்பட்டன? அவை எவ்வாறு உபயோகிக்கப்பட்டன? அவை செய்யப்பட்ட காலம் யாது? அவை எந்த நாட்டிற் செய்யப்பட்டன? அவை ஆதியில் எந்தக் கோயில் அல்லது கோயில்களில் இருந்தன? என்றின்னோரன்ன விஷயங்களை ஆராய்வதில் கரிசனை கொண்டார் டக்டர் பாலேந்திரா அவர்கள். இவ்விஷயத்தில் நிபுணத்வம் வாய்ந்த ஆராய்ச்சி அறிஞர்களின் அபிப்பிராயங்களை அவர் கோரினார். திருக்கோணமலையின் சரித்திரத்தைப் பல நூல்களின் உதவி கொண்டு பரிசிலனை செய்தார்.

கண்டெடுக்கப்பட்ட பொருட்களின் விபரம் பின்வருமாறு:

| | அளவு | நிறை |
|---|---|---|
| சிவன் (சோமாஸ்கந்த மூர்த்தம்) | 1' 8½'' × 10'' | —70 இரு. |
| பார்வதி (சோமாஸ்கந்த மூர்த்தம்) | 1' 4'' × 8'' | —30 ,, |
| சிவன் (சந்திரசேகர மூர்த்தம்) | 1' 8'' × 7'' | —25 ,, |
| பார்வதி (திரிபங்க வடிவம்) | 1' 8'' × 5'' | —30 ,, |
| கணேசர் | 1' 8'' × 10½'' | –65 ,, |
| திரிசூலம் | 1' 7'' × 1' | — 8 ,, |
| விளக்கு முடி (அன்னப்பட்சி) | 1' 5'' × 1'2'' | – 7 ,, |
| | | 235 இரு. |

திருக்கோணமலையிற் கண்டெடுக்கப்பட்ட சிவ விக்கிரகம் உலகத்திலே காணப்படும் விக்கிரகங்களுள் ஒப்புயர்வற்றது. இதனை அமைத்த சிற்பி சிற்பக் கலையிற் கைதேர்ந்தவன் என்பதற்கையமில்லை. சுகாசனத்தில் வீற்றிருக்கும் பாவனையில் அமைந்த சிவ விக்கிரகம் இலங்கையிலே வாழ்ந்த சிற்பிகளால் அமைக்கப்பட்டிருத்தல் கூடும். சந்திரசேகர மூர்த்தமாய் அமைந்த சிவ விக்கிரகம் மேற்கூறிய சிவ விக்கிரகம் அமைக்கப்பெற்ற காலத்திற்கு எவ்வளவோ முற்பட்டதென்பதற்கையமில்லை. முற்கூறிய விக்கிரகத்தைப் போல இஃது அவ்வளவு அழுத்தந் திருத்தமாக அமையவில்லை. எனினும் இப்பொழுது காணப்படும் விக்கிரகங்களுள் இதுவே மிக மிகப் பழையது என்பது தெற்றெனப் புலப்படும். சோமாஸ்கந்த சுகாசன மூர்த்தத்தின் ஓர் அங்கமாயமைந்துள்ள பார்வதி விக்கிரகத்திலும் சிற்ப அமைதியும் அழகும் காணப்படுகின்றன. எனினும் நிற்கும் தோற்றத்தில் அமைந்த பார்வதி விக்கிரகம் வெண்கலத்தில் அமைக்கப் பெற்ற சக்தி விக்கிரகங்களுள் தலை சிறந்ததொன்றாக விளங்குகின்றது. இது திரிபங்க வடிவத்தில் அமைந்துள்ளது. வலது கரம் கடகஹஸ்த முத்திரையுடன் காணப்படுகின்றது. வலக்கை விரல்களைச் சிறுக மடித்தும் விரித்தும் பெரு விரலுடன் பொருத்த வைக்கும்

கை அபிநயம் கடகஹஸ்தம் எனப்படும். பார்வதி விக்கிரகத்தின் இடது கரம் கீழே தொங்கிக்கொண் டிருக்கும் கைவிரல்கள் உள்ள தன்மையில் லோல ஹஸ்த முத்திரையாக அமைந்துள்ளது. இனி திருக்கோ ணமலையில் கண்டெடுக்கப்பட்ட கணேசர் விக்கிரகமும் ஈடு இணையற்றதாகவே விளங்குகின்றதென்பது டக்டர் பாலேந்திரா அவர்களின் கருத்து. இலங்கையிலும் இந் தியாவிலும் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் அல்லது கணேச விக்கிரகங்களுள் இதைப் போன்ற சிற்ப அமைதி வாய்ந்த அழகிய விக்கிரகம் இல்லையென்றே டக்டர் அவர்கள் கருதுகின்றார்கள். எஞ்சியிருக்கும் பொருட்கள் திரிசூல மும் அன்னப் பறவை உருவமுமாகும். சிவனுடைய ஆயு தமாகிய திரிசூலம் ஒரு அடி 7 அங்குல உயரமும் ஒரு அடி அகலமுமுள்ளது. அன்னப்பறவை உருவம் ஒரு குத்து விளக்கின் நுனியில் வைத்து புரிகளால் திருகிப் பூட்டப்பட்டு இருந்திருத்தல் வேண்டும்.

இனி, தமிழ் நூல்களிலும் ஸ்தல புராணங்களிலும் உள்ளவற்றை ஆராயுமிடத்து, திருக்கோணமலையில் கோணேசர் ஆலயத்தில் ஆயிரக்கால் மண்டபமும் தீர்த்தக்கேணியும் இருந்தன எனக்கருத இடமுண்டு.

1624-ஆம் ஆண்டு புது வருடப் பிறப்பு விழா திருக் கோணமலைக் கோயிலில் நடைபெற்றுக் கொண்டிருக் கும் பொழுது, போர்த்துக்கீசர் பிராமணர் போல வேடம் பூண்டு வந்து கோயிலைத் தாக்கினர். அத்தருணத்தில் மேலே குறிப்பிடப்பட்ட ஏழு பொருட்களையும் சிவனடி யார்கள் கடலினுள் எறிந்திருத்தல் கூடும். அன்றேல் மலையிலிருந்து 500 அடி வரை தூக்கிச் சென்று பாது காப்பான இடத்தில் புதைத்து வைத்திருத்தல் கூடும். தம் உயிருக்கே ஆபத்து நேர்ந்த போதிலும், சிவனடி யார்கள் அந்த விக்கிரகங்களையும் ஏனைய பொருட்களையும் புதைத்து வைத்தார்கள் என்ற முடிபே பொருத்தமானதா கக் காணப்படுகிறது. ஏனெனில் முன்னர்க் குறிப்பிட்ட தொழிலாளர் விக்கிரகங்களைக் கிண்டியெடுத்தபொழுது, அவை தலைகீழாக வைக்கப்பட்டிருந்தமை தெரிய வந் தது. பிற்காலத்தில் இந்த விக்கிரகங்களை எவராவது கிண்டி யெடுக்க நேரிடின், இத்திருவுருவங்களுக்கு எவ்வித பின் னமும் ஏற்படாதிருக்க வேண்டுமென்ற தூரதிருஷ்டி யுடன் அவ்வாறு தலைகீழாக அத்திருவுருவங்களைப் புதைத்து வைத்த சிவனடியார்களின் பொதுநலத் தொண்டின் பெருமையை எவ்வாறு அளவிட முடியும்?

அவர்கள் ஆற்றிய அருந்தொண்டின் பயனாலன்றோ இவ்வழகிய விக்கிரகங்களை மீண்டும் பெறும் பாக்கியம் பெற்றோம். தொண்டர் தம் பெருமை சொல்லவும் படுமோ? இவையாவும் கோணேசப் பெருமானின் திருவிளையாடல் என்றே கூறலாம்.

கோணேசர் ஆலயம் கட்டப்பட்டிருந்த இடத்தைத் திட்டமாக அறிந்து கொள்வதற்குரிய படமொன்றைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டுமென்று டக்டர், டபிள்யு. பாலேந்திரா அவர்கள் கண்ணுங் கருத்துமாக உழைத்து வந்தார்கள். லிஸ்பனிலுள்ள தேசிய நூல் நிலையத்தில் இலங்கை சம்பந்தமான படங்கள் இருப்பதாக அறிந்த டக்டர் அவர்கள் அங்கே சென்று தேடிப் பார்த்தார்கள். அத்தகைய படமொன்று அந்நூல் நிலையத்தில் இருப்பதை 1952-ஆம் ஆண்டு ஜுலை மாதம் கண்டு பேரானந்தம் கொண்டார்கள். அப்படத்தின் பிரகாரம் மலையில் மூன்று கோயில்கள் இருந்தமை புலப்பட்டது. ஒன்று மலையடிவாரத்திலும், மற்றது மத்தியிலும், மூன்ருவது கோயில் மலையுச்சியிலும் அமைக்கப்பெற்றிருந்தன. மலையுச்சியிற்ருன் சிறந்த சிற்ப வேலைப்பாடமைந்த ஆலயம் இருந்தது.

1950-ல் கண்டெடுக்கப்பட்ட திருவுருவங்கள் இலங்கையிலுள்ள ஒவ்வொரு பட்டணத்துக்கும் கிராமத்துக்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. பக்த கோடிகள் இவற்றைக் கண்ணாரக் கண்டு தொழுதனர். 325 வருடங்களாக மறைந்து கிடந்த கோணேசர் மறுபடியும் தரிசனம் தருவதைக் கேள்விப்பட்ட சனங்கள் திரள் திரளாகக் கூடித் தம் பக்திபரவசத்தைக் காட்டினர். 3500 ஆண்டுகட்கு முன்னர்க் கட்டப்பெற்ற கோயிலுக்கு ரூ. 35,000 சேர்ந்தது. இந்தப் பணத்தில் ஏழை எளியவர்கள் அன்புடன் அளித்த செம்பொற் காசுகளும் ஐந்து சதக்குத்திகளும் அதிகமெனலாம்.

கோணேசப் பெருமான் இலங்கையிலுள்ள பக்த கோடிகளுக்குக் காட்சி கொடுத்துத் திரும்புகையில், அவர் முன்னர் எழுந்தருளியிருந்த இடத்தில் மீண்டும் கோயில் கொண்டெழுந்தருள ஒரு சிறு ஆலயம் சுவாமி மலையில் விரைவாக உருவாகியது. இந்த விக்கிரகங்கள் 1952-ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 23-ம் திகதி பிரதிஷ்டை செய்யப்பட்டன.

டக்டர் பாலேந்திரா அவர்கள் செய்த ஆராய்ச்சியின் பயனுகக் கண்ட முடிபுகள் பின்வருமாறு:

(1) கிண்டியெடுக்கப்பட்ட வெண்கலத் திருவுருவங்கள் சுவாமி மலையில் இருந்த கோயிலுக்குரியன.

(2) 1624-ஆம் ஆண்டில் வருடப் பிறப்பு விழாவன்று போர்த்துக்கீசர் கோயிலைத் தாக்கிய போது இத்திருவுருவங்களை எடுத்துச் சென்ற கோயிற் பூசகர்கள் இவற்றைப் புதைத்து வைத்தனர் போலும்.

(3) கோயில் கட்டப்பெற்ற காலம் 3541 ஆண்டுகட்கு முன்னர் எனலாம்.

(4) புத்தர் பெருமான் இவ்வுலகில் அவதரிப்பதற்கு முன்னர் இலங்கையில் நாகரிகம் வாய்ந்த சமயம் ஒன்றிருந்ததெனை ஊகிக்க இடமுண்டு.

(5) சிவ விக்கிரகம் (சந்திர சேகர மூர்த்தம்) சோழர் காலத்தின் ஆரம்பத்தில் அதாவது பத்தாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் அமைக்கப் பெற்றதெனலாம். சுகாசனத்தில் வீற்றிருக்கும் சிவ விக்கிரகமும் பார்வதி விக்கிரகமும், திரிபங்க நிலையில் அமைந்த பார்வதி விக்கிரகமும், கணேச விக்கிரகமும் பதினைந்தாம் நூற்றுண்டைச் சேர்ந்த சோழ, விஜய நகரச் சிற்ப முறையில் அமைந்துள்ளன. திரிசூலம் பல்லவச் சிற்ப முறையைப் பின் பற்றியமைந்துள்ளது. இது பத்தாம் நூற்றுண்டைச் சேர்ந்தது எனலாம். இந்த விக்கிரகங்களுட் சில இலங்கையிலுள்ள சிற்பிகளால் அமைக்கப் பெற்றிருத்தல் கூடும் என்பதை முற்றுக மறுத்தல் ஒண்ணுது.

(6) பதினைந்தாம் நூற்றுண்டு விக்கிரகங்களிலுள்ள ஆபரணங்களைப் பின்பற்றியே இலங்கையிலுள்ள மக்கள் இக்காலத்தில் அணியும் ஆபரணங்கள் அமைந்துள்ளன.

(7) கோணேசர் ஆலயம் உலகிலேயுள்ள வழிபாட்டுத் தலங்களுள் மிகவும் பழமையான தொன்று எனவும், திரிகோணமலை நாகரிகமும் மொஹஞ்சதரோ நாகரிகமும் ஏறக்குறைய ஒரே காலத்தன எனவும் கொள்ளலாம்.

டக்டர் பாலேந்திரா அவர்கள் தாம் அரிதின் முயன்று சேகரித்த குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு தாம் கண்ட முடிபுகளை ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையாக எழுதி 1953 தை மாதத்தில் நடைபெற்ற றேயல் ஆசியச் சங்கக் கூட்டத்தில் பலஅறிஞர் முன்னிலையில் வாசித்தார். இந்தக் கூட்டத்துக்கு இலங்கை மகா தேசாதிபதி சோல்பரி பிரபு தலைமை வகித்தார். கூட்டத்துக்குச் சமுகமளித்த அறிஞர் சிலர் டக்டர் பாலேந்திரா அவர்களின் அரிய முயற்சியையும் ஆராய்ச்சித் திறனையும் பாராட்டிப் பேசினார்கள்.

கிண்டியெடுக்கப்பட்ட திருவுருவங்கள் மண்டிக்கிடந்த கோணேசர் ஆலயத்தின் புகழை மீண்டும் பரவச் செய்யத் தொடங்கி விட்டன. இப்பொழுது ஒரு சிறு ஆலயம் அமைக்கப் பெற்றுள்ளது. எனினும் போர்த்துக்கீசர் தரைமட்டமாக்கிய கோயிலைப் போன்றதோர் ஆலயத்தை அமைப்பதே சைவர்களின் வேணவா இத்தகையதொரு ஆலயத்தை அமைப்பதற்குத் தங்களாலியன்ற பொருளுதவி புரிவது சைவர்கள் தம் கடமையாகும். வடக்கே திருக்கேதீச்சரமும் கிழக்கே திருக்கோணேச்சரமும் வானளாவிய கோபுரங்களுடன் திகழும் நன்னாளைக் கண்ணாரக் கண்டு தொழச் சைவ உலகம் எதிர்பார்த்தவண்ணமிருக்கின்றது.



திருக்கோணமலைத் திருவுருவங்கள்

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

## திருக்கோணமலைத் தேவாரப் பதிகம்.

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
 நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
 வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
 அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
 கோணமா மலையமர்ந் தாரே. 1

கடிதென வந்த கரிதனை யுரித்து
 அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
 பிறைநுதல் அவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
 கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
 கோணமா மலையமர்ந் தாரே. 2

பனித்திளந் திங்கள் பைந்தலை நாகம்
 படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
 ஆகமுன் கலந்தவர் மதின்மேல்

தனித்தபேர் உருவ விழித்தழல் நாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்

குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 3

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியாய்

விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்

தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து

கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. 4

தாயினும் நல்ல தலைவரென்று அடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்

வாயினும் மனத்தும் மருவிநின்று அகலா
மாண்பினர் காண்பல வேடர்

நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்

கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே 5

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்

திரிந்திடா வண்ணம் உதைத்து அவற்கு அருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்

விரிந்துயர் மெளவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்

குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 6

எடுத்தவன் தருக்கை யிழிந்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 7

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. 8

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடும்உடன் ஆகித்
துன்றுமொண் பௌவம் மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. 9

குற்றம் இலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்

கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்

உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்

சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 10

திருச்சிற்றம்பலம்.

இறைவன் - கோணேசுவரர்; இறைவி - மாதுமையாள்.

---

உ

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

திருவாய்மலர்ந்து அருளிய

## திருப்புகழ்— திருக்கோணமலை

விலக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த வாடையு மணிப்பூணு மாகவெ
மினுக்கு மாதர்க ளிடக்காம மூழ்கியெ
மயலூறி

மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகியெ யுழைத்தேவி டாய்படு
கொடியேனைக்

கலக்க மாகவெ மலக்கூடி லேமிகு
பிணிக்கு ளாகியெ தவிக்காம லேயுனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயு
மொருவாழ்வே

கதிக்கு நாயக யுனைத்தேடி யேபுக
ழுரைக்கு நாயெனை யருட்பார்வை யாகவெ
கழற்கு ளாகவெ சிறப்பான தாயருள்
தரவேணும்

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரரென முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ்
தருவேளே

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுநி யிடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோல மாய்வரு
முருகோனே

நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில்
வருவோனே

நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவெ
யெடுத்த வேல்கொடு பொடித்தூள தாஎறி
நினைத்த காரிய மநுக்கூல மேபுரி
பெருமாளே.

The Nadaraja Press, Colombo.

கிடைக்குமிடம்:—

சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு,

கொழும்பு.

---

ஸ்ரீலங்கா புத்தகசாலை

221, காங்கேசன்துறை ரோட்டு,

யாழ்ப்பாணம்.